**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திரு.R.கோகுல் முருகன், பி.ஏ., பி.எல்.,**

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 15–ஆம் நாள்,

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01–ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.121/2011**

**CNR.No.TNKR03-000118-2011**

1) சன்ஜய்ராம்
(Late a minor represented by next friend and guardian
Mother Umadevi but now having attained majority)

2) இளவர் சுரூபிகா
இளவர் சார்பாக அவரின் பாதுகாவலரும் தாயாருமான உமாதேவி
மூலம் பிரதிநிதித்துவபடுத்தப்படுகிறார்.

...வாதிகள்

**//எதிர்//**

1.முத்துசாமி கவுண்டர் (இறப்பு)

2.கண்ணையன்

3.மனோகரன்

4.விஜயா

5.B.கருணாகரன்

6.E.K.சுப்பிரமணியன்

7.அருக்காணி அம்மாள் (இறப்பு)

8.குப்புசாமி

9.ராமாயி அம்மாள்

10.கண்ணம்மாள்

11.சுப்பிரமணி

12.கருப்பண்ணன் (இறப்பு)

13.K.சேகர்

14.K.மகேஷ்வரி ...பிரதிவாதிகள்

Amended as per order in I.A.No.609/2015 Dated 27.03.2015.

இவ்வழக்கானது கடந்த 07.09.2022–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.நடராஜன் அவர்கள் ஆஜராகியும், 1, 7, 12 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 2, 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 3, 8, 9, 10, 11, 13, 14 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை என்பதால் அவர்கள் வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்ட கடந்த 22.07.2005ம் தேதிய வேலாயுதம்பாளையம் சார்–பதிவாளர் அலுவலக ஆவண எண்.626/2005 என்ற கிரையப் பத்திரம் மற்றும் கடந்த 22.07.2005ம் தேதி மேற்படி அலுவலக ஆவண எண்.625/2005 என்ற கிரையப் பத்திரம் ஆகியவைகள் ஆரம்பம் முதலே இல்லாநிலையது (void ab–initio) வாதிகளின் பாகத்தைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்று விளம்புகை பரிகாரமும், தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 9 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் இரண்டு தொடர்ச்சியான பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், வழக்கின் செலவுத்தொகை உள்ளிட்ட ஏனைய பரிகாரங்கள் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல்.

**2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கும் பின்வருமாறு.**

தாவா சொத்துக்கள் இந்நீதிமன்ற நிலவரை எல்லைக்குட்பட்ட புஞ்சை கடம்பங்குறிச்சி கிராமம், கரூர் தாலுகா, கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இளவர் வாதிகளின் தாயார் உமாதேவி ஆவார். வழக்கின் 1ம் பிரதிவாதி இந்த வழக்கின் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளின் தகப்பனார் ஆவார். 4வது பிரதிவாதி 2வது பிரதிவாதியின் மனைவி ஆவார். 2வது பிரதிவாதிக்கு இரண்டு பெண் மக்கள் உள்ளார்கள். 5 மற்றும்

6 வது பிரதிவாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் நெருங்கிய கூட்டாளிகள் ஆவார்கள். வாதிகளும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் இந்து கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். வழக்கின் 3 வது பிரதிவாதி மனோகரன் உமாதேவியின் கணவர் ஆவார். உமாதேவிக்கும் 3 வது பிரதிவாதிக்கும் கடந்த 24.03.1999 ம் தேதி திருமணம் நடைபெற்றது. பின்னிட்டு இருவரும் கணவன் மனைவியாக 3 வது பிரதிவாதியின் வீட்டில் குடும்பம் நடத்தினார்கள். அந்த இல்வாழ்வின் பயனாக உமாதேவிக்கு வாதிகள் இருவரும் பிறந்தார்கள். வாதிகள் பிறந்ததற்கு பின்னிட்டு 3 வது பிரதிவாதி கெட்ட சகவாசங்கள் மற்றும் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி பராரி வாழ்க்கை வாழ்ந்து வந்தார். கெட்ட பெண்களுடன் சகவாசம் கொண்டு அவர்களுடன் கள்ள உறவு வைத்துக்கொண்டு தினம் தினம் பணமும் நகையும் கேட்டு வாதிகளின் தாயாரை அடித்து உதைத்து கொடுமைகள் செய்தார். பின்னிட்டு 3 வது பிரதிவாதிக்கு பணம் தேவைப்பட்ட போதெல்லாம் வாதிகளின் தாயாரை அடித்து உதைத்து அவரின் பெற்றோரிடம் சென்று நகையும் பணமும் வாங்கி வரும்படி அடிக்கடி வரதட்சணை கொடுமைகள் செய்து வந்தார். இந்த சூழ்நிலையில் கடந்த 2010 ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு நாள் 3 வது பிரதிவாதி அளவுக்கு அதிகமாக மது அருந்தி விட்டு வந்து வாதிகளின் தாயாரின் பெற்றோரிடம் சென்று நகையும் பணமும் வாங்கி வரும்படி கட்டாயப்படுத்தி வரதட்சணை கொடுமை செய்தார். அதற்கு மறுத்தபோது அடித்து உதைத்து வாதிகளின் தாயாரையும், இளவர் வாதிகளையும் வீட்டை விட்டு துரத்தி விட்டு விட்டார். அன்று முதல் இளவர் வாதிகளும், வாதிகளின் தாயாரும் அவரது பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறார்கள். 3 ம் பிரதிவாதி வாதிகளையும் 2 ம் வாதியின் காப்பாளரையும் ஏற்றுக்கொண்டு குடும்பம் நடத்த மறுத்து விட்டார். வாதிகளையும் 2 ம் வாதியின் காப்பாளரையும் 3 ம் பிரதிவாதி முற்றிலுமாக புறக்கணித்து விட்டார். மேலும் வாதிகளுக்கும், வாதிகளின் தாயாருக்கும் வேண்டிய வாழ்க்கை பொருளதவியையும் கொடுக்க மறுத்து விட்டார். இளவர் வாதிகளுக்கு வேண்டிய உணவு, உடை, இருப்பிடம், கல்வி வசதி, மருத்துவ வசதி போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகளை வாதிகளுக்கு வாதிகளின் தாயார் ஏற்படுத்தி கொடுத்து வருகிறார். தாவா சொத்துக்கள் ஆதியில் காளியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்கள் ஆகும். மேற்படி காளியண்ண கவுண்டர் சென்ற 1940 ம் ஆண்டிலும்

அவர் மனைவி வள்ளியம்மாள் சென்ற 1985ம் ஆண்டிலும் தங்களது பாத்திய சொத்துக்களைப் பொறுத்து யாதொரு ஆவணமும் எழுதி வைக்காமல் செலம்பண்ண கவுண்டர், வையாபுரி கவுண்டர் மற்றும் 1வது பிரதிவாதி முத்துசாமி கவுண்டர் ஆகியோர்களை தங்களது வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார்கள். பின்னிட்டு மேற்படி கூட்டுக் குடும்ப சொத்துக்களைப் பொறுத்து கடந்த 12.06.1986ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட பாகக்கறார் எழுதிக் கொண்டார்கள். அந்த பாகக்கறாரில் தாவா சொத்துக்கள் 1வது பிரதிவாதிக்கு சி செடியூலில் ஒதுக்கப்பட்டு அன்று முதல் 1வது பிரதிவாதி தாவா சொத்துக்களை கூட்டுக் குடும்ப தலைவர் என்ற முறையில் ஆண்டு அனுபவம் செய்து வந்தார். தாவா சொத்துக்கள் வாதிகளுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டு அவர்கள் அனைவரும் அனைவருக்கும் தெரிய வெளிப்படையாக பொதுவில் வைத்து நாளது தேதிவரை யாதொரு பாகப்பிரிவினையும் செய்து கொள்ளாமல் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். இந்து வாரிசுரிமைச் சட்டப்படி தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பொதுவில் 2/9 பங்கும், 1வது பிரதிவாதிக்கு மீதி 3/9 பங்கு பாத்தியமும், 2வது பிரதிவாதிக்கு 3/9 பங்கு பாத்தியமும், 3வது பிரதிவாதிக்கு 1/9 பாக பாத்தியமும் உள்ளது என்பதும், தாவா சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகளோடு சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்ய முடியாத சூழ்நிலை இருப்பதால் கடந்த 2010ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளை நேரில் சந்தித்து தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு ஒன்பது சம பாகங்களாக பிரித்து அதில் இரண்டு தொடர்ச்சியான சம பாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கி அதை வாதிகளின் தனிப்பட்ட சுவாதீனத்தில் வைக்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் மறுத்து விட்டார்கள். தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய சட்டப்படியான பங்கை மோசடி செய்யும் பொருட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதியோடு கள்ளக் கூட்டு வைத்துக் கொண்டு தாவா சொத்தின் ஒரு பகுதியைப் பொறுத்து 4ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 22.07.2005ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள். பின்னிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கின் 5 மற்றும் 6ம் பிரதிவாதியோடு கள்ளக் கூட்டு வைத்துக் கொண்டு தாவா சொத்தின் ஒரு பகுதியைப் பொறுத்து 5 மற்றும் 6ம் பிரதிவாதிகள் பெயருக்கு கடந்த 22.07.2005ம் தேதி ஒரு

பதிவு செய்யப்பட்ட கிரையம் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள். 4 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள மேற்படி ஆவணங்கள் ஒருபோலியான சட்டப்படிக்கு செல்லாத ஆவணங்களாகும். 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை. தாவா சொத்தில் வாதிகளுக்குரிய சட்டப்படியான பங்கை மோசடி செய்யும் எண்ணத்தில் பிரதிவாதிகள் தங்களுக்குள் கள்ளக்கூட்டு வைத்து மேற்படி சட்டப்படிக்கு செல்லாத ஆவணங்களை எழுதிக் கொண்டார்கள். மேற்படி ஆவணங்கள் வாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்தை விற்பனை செய்ய வேண்டிய அவசியமோ தேவையோ இல்லை. இன்றுவரை 1வது பிரதிவாதி கூட்டுக் குடும்பத் தலைவர் என்ற முறையில் தாவா சொத்துக்களை நிர்வகித்து வருகிறார். 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளுக்கு கடன் வாங்க வேண்டிய அவசியமோ தேவையோ இல்லை. வாதிகள் சார்பாக இளவர் வாதிகளின் தாயார் பலமுறை முயற்சி செய்தும் தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு சம பாகங்களாக பிரித்து வாதிகளுக்குரிய சம பாகத்தை ஒதுக்கி அதில் அவர்களின் தனிப்பட்ட சுவாதீனத்தில் வைக்க 1 முதல் 3 பிரதிவாதிகள் முன்வரவில்லை. மாறாக கடந்த 04.02.2011 ம் தேதி தாவா சொத்துக்களைப் பொறுத்து 1 முதல் 6 பிரதிவாதிகள் 3 ம் நபர்கள் பெயரில் வில்லங்கப் பராதீனம் செய்ய முயற்சி செய்தார்கள். வாதிகளின் சட்டப்படியான பங்கை மோசடி செய்யும் எந்தவொரு செயலும் வாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதும், பிரதிவாதிகளோடு சமாதானமாக போக வாதிகளின் தாயார் எடுத்த அத்துணை முயற்சிகளும் வீணாக போய்விட்டது. மேற்படி தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்தைப் பொறுத்து கடந்த 22.07.2005 ம் தேதி 4 ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் (ஆவண எண்.626/2005, வேலாயுதம்பாளையம் சார்பதிவகம்) தாவா சொத்தில் வாதிகளுக்குரிய சட்டப்படியான பங்கை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என அறிவிக்கக்கோரி ஒரு விளம்புகை பரிகாரத்திற்கு உத்திரவிடக்கோரியும், மேலும் தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்தைப் பொறுத்து கடந்த 22.07.2005 ம் தேதி 5 மற்றும் 6 வது பிரதிவாதிகள் பெயரில் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் (ஆவண எண்.625/2005, வேலாயுதம்பாளையம் சார்பதிவகம்) தாவா சொத்தில் வாதிகளுக்குரிய சட்டப்படியான பங்கை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என அறிவிக்கக்கோரி ஒரு

விளம்புகை பரிகாரத்திற்கு உத்தரவிடக்கோரியும், தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு ஒன்பது சமபாகங்களாக பிரித்து அதில் தொடர்ச்சியான இரு சமபாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கி அதை வாதிகளின் தனிப்பட்ட சுவாதீனத்தில் வைக்க ஒரு பாகப்பிரிவினை பரிகாரத்திற்கு உத்திரவிட்டு அதை அனுசரித்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க உத்தரவிடக்கோரியும், தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது அவர்கள் சார்பாக யாருமோ எந்த முறையிலும் யார் பெயருக்கும் வில்லங்க பராதீனம் செய்ய முற்படக்கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க உத்திரவிடக்கோரியும் மேலும் தாவா செலவுத்தொகை தர உத்தரவிடக்கோரியும் வாதிகளால் இந்த தாவா தாக்கல்.

**3) 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2, 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்—**

வழக்குரை பொய்யானது. வீணானது. சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர ஏனைய சங்கதிகளை வாதிகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்கள். இளவர் வாதிகள் அவரது தாயார் உமாதேவியின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும்இருப்பதாக கூறுவது பொய். 3ம் பிரதிவாதி வாதிகள் மற்றும் அவரதுதாயார் ஒரே கூரையின் கீழ் தான் வாழ்ந்து வருகிறார்கள். வாதிகளின் தந்தை உயிருடன் இருக்கும்வரை அவர் மட்டுமே வாதிகளின் சட்டப்படியான பாதுகாவலராக இருக்கமுடியும். ஆகவே வாதிகளை அவரது தாயார் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது அந்த காரணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும். 3ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பெயரில் தான் வாதிகள் மூலம் அவர்கள் அவரது தாயார் மூலம் பிரதிநிதித்துவம் படுத்தப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கொடி வழி வரைபடம் தவறானது. ஒப்புக்கொண்டுள்ளபடியே 2ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு முறையே 2 பெண் குழந்தைகள் உள்ள நிலையில் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் வாதிகள் தாக்கல் செய்திருந்த தாவா அவசியமான

தரப்பினர்களை தரப்பினராக வழக்கில் சேர்க்காததால் குறைவுற்றுள்ளது. வழக்குரையில் பாரா 7ல் 3ம் பிரதிவாதிக்கு எதிராக தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய் மற்றும் கற்பனையானது. வாதிகள் அவரது தாயார் மற்றும் 3ம் பிரதிவாதி ஒன்றாக வசிப்பதற்கான எழுத்துமூலமான ஆவணங்கள் உள்ளது. கடந்த 12.06.1986ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதில் தாவா சொத்துக்கள் உள்ளிட்ட சொத்துக்கள் சி அட்டவணை சொத்தாக 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகள் பொதுவாக தாவா 1வது அயிட்ட சொத்தில் பொதுவில் ஏக்கர் 0.26–1/2 யும் , 2 வது அயிட்ட சொத்தில் பொதுவில் ஏக்கர் 0.20 யும் , 3 வது அயிட்ட சொத்தில் பொதுவில் ஏக்கர் 0.11 யும், 5 வது அயிட்ட சொத்தில் பொதுவில் ஏக்கர் 0.50 யும், சர்வே நம்பர்.289 ல் ஏக்கர் 0.08–1/2 ல் பொதுவில் ஏக்கர் 0.04, 11 வது அயிட்ட சொத்தான சர்வே நம்பர்.281 ஏ–ல் பொதுவில் ஏக்கர் 9.56 ல் பொதுவில் ஏக்கர் 0.05–1/2 இதில் பொதுவில் ஏக்கர் 0.06 ஆகிய சொத்துக்களை முறையான பேச்சுவார்த்தைக்கு பிறகு ரூ.1,30,000/– மறுபயனுக்காக மேற்படி பூமிகளை 1 முதல் 3 பிரதிவாதிகளும் சேர்ந்து 5ம் பிரதிவாதிக்கும், 6ம் பிரதிவாதிக்கும் கடந்த 22.07.2005ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் விற்பனை செய்துள்ளார்கள். மேற்படி கிரையப் பத்திரத்தில் மலையம்பாளையத்தைச் சேர்ந்த ரங்கசாமி கவுண்டர் மகன் சண்முகத்திற்கு ரூ.50,000/–மும், நன்னியூரைச் சேர்ந்த கருப்பண்ண கவுண்டர் மகன் ராமகிருஷ்ணனுக்கு ரூ.40,000/–மும், மலையம்பாளையத்தைச் சேர்ந்த காளியப்ப கவுண்டர் மகன் தங்கவேலுக்கு ரூ.35,000/–மும் போன்ற கடன்களை கொடுத்து தீர்க்கும்படி சாட்டுதல்போக மீதி கிரையத்தொகை ரூ.5,000/–ஐ 1 முதல் 3 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதியிடமும், 6ம் பிரதிவாதியிடமும் இருந்து பெற்றுக் கொண்டார்கள். மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு மேற்படி கடன்களை 5ம் பிரதிவாதியும் 6ம் பிரதிவாதியும் கொடுத்து தீர்த்து விட்டார்கள். ஆகையால் 5ம் பிரதிவாதியும், 6ம் பிரதிவாதியும் பிரதிபிரயோஜனத்திற்காகவும், நல்ல எண்ணத்துடனும், கிரையம் பெற்ற உண்மையான கிரையதாரர்கள் ஆவார்கள். கிரையம் பெறும்போது அவருக்கு வாரிசுகள் இருப்பதை மறைத்து விட்டார்கள். மேலும் 3ம் பிரதிவாதி வாங்கிய கடன்கள் அவருடைய குடும்பத்தேவைக்காகவும், மைனர் வாதிகளின் பராமரிப்புக்காகவும் வாங்கப்பட்ட கடன்கள் ஆகும். அந்த கடன்களால்

வாதிகள் பயனடைந்து உள்ளார்கள். ஆகையால், மேற்படி கிரையம் வாதிகளையும் அவர்களுடைய பாகங்களையும் கட்டுப்படுத்தும். கிரையத்திற்குப் பின் மேற்படி கிரைய சொத்துக்களை 5ம் பிரதிவாதி மற்றும் 6ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் விட்டுவிட்டனர். அன்று முதல் மேற்படி கிரையச் சொத்துக்களுக்கு பட்டா பெற்று உரிமையாளராக பொதுவில் 5, 6 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள். ஆகையால் 5ம் பிரதிவாதியும் 6ம் பிரதிவாதியும் வாங்கிய நிலங்களை 5, 6 பிரதிவாதிகளுக்கே அதை ஒதுக்கிதர equityன் கோர உரிமை உள்ளது. தாவாவின் உண்மையான வாதிகள் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் ஆவார்கள். 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளை ஏமாற்றும் எண்ணத்தில் வாதிகள் பெயரில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்குரையில் பாரா 14 சி–ல் குறிப்பிட்டுள்ள 5ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 3ம் பிரதிவாதியின் அத்தைகள் அருக்காணி அம்மாள், வள்ளியம்மாள் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்கள் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள். மேற்படி அருக்காணி அம்மாள் அவருடைய மகன் கருப்புசாமி மற்றும் அவர் மகள் ராமாயி அம்மாள் மற்றும் கண்ணம்மாளை விட்டுவிட்டு இறந்துவிட்டார்கள். அவர்கள் தான் வழக்கின் 8 முதல் 10 பிரதிவாதிகள். வேலம்மாள் அவரது மகன் சுப்பிரமணி மற்றும் அவரது மகள் கருப்பாயி, சம்பூர்ணம் ஆகியோர்களை விட்டுவிட்டு இறந்துவிட்டார். அந்த கருப்பாயி அவரது கணவர் கருப்பண்ணன் மற்றும் மகன் சேகர் மற்றும் மகள் மகேஸ்வரி ஆகியோரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவர்கள் தான் வழக்கின் 12 முதல் 14 பிரதிவாதிகள். மேற்படி சம்பூர்ணம் மற்றும் பழனியம்மாள் திருமணம் ஆகாத நிலையில் இறந்துவிட்டார்கள். தாவா சொத்துக்களில் 8 முதல் 14 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையோ பாத்தியமோ இல்லை என்ற கூறப்பட்டுள்ள விபரங்கள் தவறு. தாவா அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் குறைவுற்றுள்ளது. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. ஆகவே வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி எதிர்வழக்குரை மற்றம் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) வழக்குரை எதிர்வழக்குரை, வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கடந்த 22.02.2012ம்**

**<u>தேதியன்று பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது</u>**

1) வாதிகளுக்கு 9 ல் 2 பங்கு பாகம் கிடைக்கத்தக்கதா?

2) 22.07.2005 தேதியிட்ட கிரயம் பத்திரங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்பது சரியா?

3)வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை கிடைக்கத்தக்கதா?

4)வேறு என்ன பரிகாரம்?

**<u>5) கடந்த 29.01.2020 ம் தேதி வனையப்பட்ட கூடுதல் எழுவினாக்கள்</u>**

1.வாதி வழக்கில் அவசிய தரப்பினரை சேர்க்கவில்லை என 5 ம் பிரதிவாதி கூறியுள்ளது சரியா?

6) வாதிகள் தரப்பில் இளவர் வாதிகளின் தாயார் உமாதேவி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும், பிரதிவாதிகள் தரப்பில் 5 ம் பிரதிவாதி கருணாகரன் என்பவர் பி.சா.1 ஆகவும், எம்.கே.தங்கவேல் என்பவர் பி.சா.2 ஆகவும், கே.ராமகிருஷ்ணன் என்பவர் பி.சா.3 ஆகவும், கே.ஆர்.சண்முகம் என்பவர் பி.சா.4 ஆகவும், எம்.வேலுசாமி என்பவர் பி.சா.5 ஆகவும், P.பெரியசாமி என்பவர் பி.சா.6 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்களும், சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இறுதியாக வழக்கின் நிரூபிக்கும் சுமையை பொறுத்து பின்வரும் சட்ட முதுமொழியில் பின்வருமாறு கண்டுள்ளது. Aactore incumbit onus probandi – Burden of proof lies on the Plaintiff or the Complainant.

7. ஆகவே வாதிகள் தான் அவர்களது வழக்கை நிரூபிக்க வேண்டும். மேலும் இத்தருணத்தில் இந்திய சாட்சிய சட்டத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகளே அவர்களது வழக்கின் நிரூபிக்கும் சுமையை பொதுவாக கொண்டுள்ளதாக இந்திய

சாட்சிய சட்டப் பிரிவுகள் 101 மற்றும் 102–ல் தெரிவித்துள்ளது. ஆகவே மேற்படி சட்டப்பிரிவுகள் மற்றும் சட்ட முதுமொழிக்கிணங்க இந்த வழக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் அவர்களுடைய வழக்கை நிரூபித்துள்ளார்களா? என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிறது.

**8) கூடுதல் எழுவினா 1 –**

இருதரப்பிற்கும் கேட்கை நல்கப்பட்டது. 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துமூலமான வாதுரை கவனமுடன் படிக்கப்பட்டது. வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் போதிய கவனம் செலுத்தி படிக்கப்பட்டன. தாவா சொத்துக்கள் இந்நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குட்பட்ட புஞ்சை கடம்பங்குறிச்சி கிராமம், கரூர் தாலுகா, கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் தரப்பினர்களின் உறவுமுறை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி, 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தை என்பதும், 4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மனைவி என்பதும், 2ம் பிரதிவாதிக்கு 2 பெண் மக்கள் உள்ளனர் என்பதும், 5 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் 3ம் நபர்கள் என்பதும், வாதிகளும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் இந்து அபிபக்த கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக இருக்கிறது. மேலும் தாவாச் சொத்துக்கள் ஆதியில் ஒரு காளியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்து என்பதும் அவர் உயிருடன் இருந்தவரை தாவாச் சொத்துக்களை குடும்பத் தலைவர் (கர்த்தா) என்ற வகையில் அனுபவித்து வந்தார் என்பதும், அவர் கடந்த 1940ம் ஆண்டிலும் அவர் மனைவி 1985ம் ஆண்டிலும் சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்பதும், அவருக்கு சிலம்பகவுண்டர், வையாபுரி கவுண்டர், 1ம் பிரதிவாதி முத்துச்சாமி கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் என்பதும், மேற்படி காளியண்ண கவுண்டர் இறந்ததற்கு பிறகு கூட்டுக்குடும்பச் சொத்துக்களை பொறுத்து கடந்த 12.06.1986ம் தேதி செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் சி அட்டவணை சொத்தாக தாவாச் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்பதும் கூட வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக தொடர்ந்து இருந்து வருகிறது.

இத்தருணத்தில் 5ம் பிரதிவாதி தரப்பில் அவசியமான தரப்பினர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த தாவா குறைவுற்றுள்ளதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்தததின் அடிப்படையில் இந்த எழுவினா இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டிருக்கிறது. இத்தருணத்தில் வழக்கில் சாட்சியம் அளித்துள்ள 1, 2 வாதிகளின் தாயார் உமாதேவி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **"2ம் பிரதிவாதிக்கு 2 மகள்கள் உண்டு. அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்"** என்று குறிப்பிட்டு சான்றுரைத்துள்ளார்.

9)இத்தருணத்தில் மேற்காண் அறிந்தமைகளிலிருந்து வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் தரப்பிலேயே அவர்கள் 3ம் பிரதிவாதியின் மைனர் மக்கள் என்ற முறையில் தாவாச் சொத்தின் உரிமை கொண்டாடும் வகையில் 1ம் பிரதிவாதியின் மகனான 2ம் பிரதிவாதியின் குழந்தைகளுக்கும் தாவா சொத்தில் சட்டப்படி பாகம் உள்ளது. ஆகவே அவர்கள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் அவசியமான தரப்பினர்களை சேர்க்காத குற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இதைப்பொறுத்து 5ம் பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் பின்வரும் கருத்துசெறிவு மிக்க முன்தீர்ப்புரைசுட்டிக்காட்டி அவசியமான தரப்பினர்களை பாகப்பிரிவினை வழக்குகளில் தரப்பினர்களை சேர்க்காதபோது அந்த காரணத்தின் அடிப்படையில் மட்டுமே கூட வழக்கை தள்ளுபடி செய்யலாம் என்றும் மேலும் அந்த எதிர்வாதத்தை மேல்முறையீட்டு வழக்கில் கூட முன்வைக்கலாம் என்று பின்வரும் கருத்துசெறிவுமிக்க முன்ீதுர்ப்புரையை சுட்டிக்காட்டி வாதிட்டார்.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

S.A.No.1698 of 2003

Rathinaswamy Vs. Achi kannu and others

In the absence of necessary party no effective decree can be passed. Therefore, non-joinder of necessary party is fatal to the case. In view of the above said principales, this Court is of the considered opinion that non-joinder of necessary party in this partition suit is fatal and the suit is liable to be dismissed on this ground alone. Accordingly the first substantial question of law is answered against the plaintiffs and in favour of the defendants. Therefore, this Court is of the

considered opinion that the Courts below completely erroneous in holding that the suit is maintainable without adding the necessary party to the suit for partition and against the evidence on ground. Therefore, this Court is necessarily to interfere with the findings of the courts below. Para 13.

மேற்படி கருத்துசெறிவு மிக்க முன்தீர்ப்புரையிலிருந்து பார்க்கும்போது மேற்காண் அறிந்தமைகளிலிருந்து வாதிகள் தரப்பு ஒப்புக்கொள்ளப்பட்ட வழக்கின்படியே தாவா சொத்துக்களில் பங்குரிமையரான 2ம் பிரதிவாதியின் 2 மகள்களை தரப்பினர்களாக சேர்க்காததால் வாதியின் பாகப்பிரிவினைக்கான தாவா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஒரே காரணத்தின் அடிப்படையில் வாதியின் தாவாவை சட்டப்படி தள்ளுபடி செய்துவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. ஆகவே இந்த எழுவினாவிற்கு வாதிகளுக்கு பாதகமாக இங்நநீதிமன்றம் விடையளிக்கின்றது.

**<u>10)எழுவினாக்கள் 1 முதல் 3–</u>**

முந்தைய எழுவினாவில் கண்டுள்ளபடி வாதியின் தாவா சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ளதால் வழக்கின் நட்கூறுகளைப் பொறுத்து எவ்வித காண் முடிவுக்கும் இந்நீதிமன்றம் சட்டப்படி வரமுடியாது. ஆகவே இந்த எழுவினாக்களைப் பொறுத்து இந்நீதிமன்றம் எவ்வித காண் முடிவுக்கும் வரவில்லை.

**<u>11) எழுவினா 4</u>**

முந்தைய எழுவினாக்களிலேயே வாதிகள் கோரியுள்ள பரிகாரங்களில் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் ஏதும் இல்லை என்று விடையளிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கைப் பொறுத்து வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் இந்த எழுவினாவிற்கு விடையளிக்கிறது. வழக்கின் தன்மை சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உபய தரப்பினர்கள் வழக்கில் அவரவர்கள் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

12) ஆகவே, இறுதியாக வாதியின் தாவாவை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 01.11.2022– ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R GOKUL MURUGAN

Digitally signed by R GOKUL MURUGAN
DN: cn=R GOKUL MURUGAN, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்–**

| | |
|---|---|
| வா.சா.1 | உமாதேவி |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | வம்சாவழி பட்டியல் |
| வா.சா.ஆ.2 | 24.03.1999 ம் தேதியிட்ட வாதிகளின் தாயார் உமாதேவி மற்றும் 3 வது பிரதிவாதி மனோகரனுக்கும் நடைபெற்ற திருமணம் சம்மந்தமான திருமண அழைப்பிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | 1 வது வாதியின் பிறப்பு சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.4 | 2 வது வாதியின் பிறப்பு சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.5 | 12.06.1986 ம் தேதியிட்ட 1 வது பிரதிவாதி மற்றும் அவர் மகன்கள் எழுதிக்கொண்ட பாகக்கறார் பத்திரத்தின் பதிவு நகல் |
| வா.சா.ஆ.6 | 22.07.2005 ம் தேதியிட்ட 4 வது பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு நகல் |
| வா.சா.ஆ.7 | 22.07.2005 ம் தேதியிட்ட 5 மற்றும் 6 வது பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்தரத்தின் பதிவு நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| பி.சா.1 | கருணாகரன் (5 ம் பிரதிவாதி) |
| பி.சா.2 | தங்கவேல் |

| | |
|---|---|
| பி.சா.3 | கே.ராமகிருஷ்ணன் |
| பி.சா.4 | கே.ஆர்.சண்முகம் |
| பி.சா.5 | எம்.வேலுச்சாமி |
| பி.சா.6 | பி.பெரியசாமி |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | |
|---|---|
| பி.சா.ஆ.1 | 10.09.2003 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு அசல் |
| பி.சா.ஆ.2 | 02.01.2004 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு அசல் |
| பி.சா.ஆ.3 | 12.05.2004 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு அசல் |
| பி.சா.ஆ.4 | 12.06.1986 ம் தேதியிட்ட 1ம் வாதி வகையறா செய்து கொண்ட பாகக்கறார் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.5 | 22.07.2005 ம் தேதியிட்ட 1 முதல் 3 வாதிகள், 5 மற்றும் 6 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.6 | 03.02.2006 ம் தேதியிட்ட 5 ம் பிரதிவாதி பெயரில் 6 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.7 | 5 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா பாஸ் புக் அசல் |
| பி.சா.ஆ.8 | பட்டா |
| பி.சா.ஆ.9 | கணினி பட்டா சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.10 | கணினி பட்டா சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.11 | கணினி பட்டா சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.12 | சிட்டா சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.13 | அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.14 | சமாபந்தி சிட்டா சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.15 | அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.16 | 14.12.2016 தேதியிட்ட அருக்காணி, கரூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்ல் செய்த அசல் வழக்கு எண்.113/2012 ன் பிராது சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.17 | 14.12.2016 தேதியிட்ட 1 ம் வாதிக்கு மேற்படி வழக்கில் இடைக்கால மனு எண்.171/2012 ல் அனுப்பப்பட்ட நீதிமன்ற அழைப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.18 | 14.12.2016 தேதியிட்ட 2 ம் வாதிக்கு மேற்படி வழக்கில் இடைக்கால மனு எண்.171/2012 ல் அனுப்பப்பட்ட நீதிமன்ற அழைப்பாணை சான்றிட்ட நகல் |

**சாட்சி சான்றாவணங்கள்–**

| | |
|---|---|
| சா.சா.ஆ.1 | குடும்ப அட்டையின் அ பதிவேட்டு நகல் |
| சா.சா.ஆ.2 | குடும்ப அட்டையுடன் குடும்பத்தலைவர் மனோகரனின் ஆதார் அட்டை, மனைவி உமாதேவி என்பவரது ஆதார் அட்டை, மகன் சஞ்சய்ஸ்ரீ என்பவரது ஆதார் அட்டை மற்றும் மகள் சுரூபிகா என்பவரது ஆதார் அட்டை (வரிசைகள் மொத்தம் நான்கு எண்ணம்) |
| சா.சா.ஆ.3 | குடும்ப அட்டைக்கு உள்தாள் இணைப்பு தொடர்பாக 2015, 2016ம் ஆண்டிற்கான உள்தாள் வழங்கப்பட்டதற்கான பதிவேடு |
| சா.சா.ஆ.4 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் நியாயவிலைக்கடையால் பராமரித்து வரும் அ பதிவேட்டு நகல் |
| சா.சா.ஆ.5 | 2017ம் ஆண்டிற்கான உள்தாள் வழங்கப்பட்டதற்கான பதிவேடு |
| சா.சா.ஆ.6 | 2017ம் ஆண்டிற்கு இணைப்புத்தாள் வழங்கியது தொடர்பாக கையொப்பம் பெற்றப்பட்ட "அ" பதிவேட்டின் நகல் |

R GOKUL MURUGAN

Digitally signed by R GOKUL MURUGAN
DN: cn=R GOKUL MURUGAN, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**